In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023
Prosecution witness P.W.5

Name: Nivendhan
Calling:

Father Name:
Religion:

Village:
Caste:

Taluk:
Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 15-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. A3, A5, A7, A8, A9 are present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல் ராமர் காலனியில் வசிக்கிறேன். பஜாஜ் பைனான்சில் வேலை பார்க்கிறேன். அசா1 முதல் 4 ஆகியோர்களை தெரியும். காணொளி காட்சி மூலம் ஆஜர் எதிரி மற்றும் ஆஜரில் உள்ள ஆஜர் எதிரிகளைத் தெரியாது. 20.07.2023ம் தேதி நான் அலுவலகத்தில் இருந்தபோது சுதன்பிரபு சரவணன் அண்ணனை கொலை செய்துவிட்டதாகச் சொன்னார். யார் கொலை செய்தார்கள் எனச் சொல்லவில்லை. முன்விரோதம் என்னஇருந்தது எனவும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது. ஆய்வாளர் என்னிடம் கையெழுத்து வாங்கினார். எதற்கு கையெழுத்து வாங்கினார் என்பதும் எனக்குத் தெரியாது.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தபோது, பட்டறை சரவணன் எனக்கு சிறுவயதுமுதலே நண்பர் என்றும், அவரைப்பற்றி எல்லா விவரமும் தெரியும் என்றும், சுமார் 1 மாதம் முன்பு அல்லாசிக் யாரோ ஒரு சிறுவனுடன் ஆபாசமாக

வீடியோகால் பேசியது சம்மந்தமான வீடியோவை வாட்ஸ்அப்பில் யாரோ வெளியிட்டதை பட்டறை சரவணன்தான் வெளியிட்டுள்ளதாக சொல்லி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி வருவதாக் கூறினார் என்றும், மேலும் கடந்த ஒருவார காலமாக என்னிடம் அல் ஆசிக் ஆட்கள் தனக்கு ரூட் போடுவதாகவும் அதனால் பயமான இருக்கு என்றும் சொன்னார் என்றும், நான் அவரிடம் பத்திரமாக இருங்கள் என்று சொன்னேன் என்றும், கடந்த 20.07.2023ம் தேதி எம்எஸ்பி பள்ளி அருகே உள்ள தைலக்காடு கிரவுண்டில் நான் எனது நண்பர்களும் மற்றும் சிலரும் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தபோது மாலை சுமார் 6.30 மணியளவில் பட்டறை சரவணன் அவரது மகனுடன் வந்து கிரிக்கெட் விளையாடிவிட்டு சுமார் 7.15 மணியளவில் அவரது மகனுடன் அவரது பைக்கில் சென்றார் என்றும், பாலாஜியின் வண்டியில் தினேஷ் ஏறிபோனார் என்றும், நானும் மற்ற நண்பர்களும் கிரவுண்டிலேயே நின்று பேசிக்கொண்டிருந்தபோது சுதனுக்கு தினேஷ் போன் செய்து விமலா ஆஸ்பத்திரி பக்கத்தில வச்சு சரவணன் அண்ணன சிலர் வெட்டி கொன்னுட்டாங்க என்று சொன்னதும் நானும் எனது நண்பர்களும் அங்கு சென்று பார்த்தபோது சரவணன் அண்ணன் இறந்த நிலையில் குப்புற கிடந்தார் என்றும் அவரது பைக் கொஞ்சம் தள்ளி கிடந்தது என்றும், குழந்தையை தினேஷ் தூக்கி வைத்திருந்தான் என்றும் நான் சம்பவம் பற்றி விவரம் கேட்டபோது தினேசிடம் என்ன நடந்தது என கேட்டபோது காரிலும், பைக்கிலும் வந்த சிலர் அண்ணனை சரமாறியாக வெட்டி கொன்னுட்டு காரிலும், பைக்கிலும் ஏறி விவேகாநந்தா நகர் பக்கமாக தப்பி சென்றுவிட்டதாக சொன்னார்கள் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**–வழக்கறிஞர்கள் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனக்கூறினார்கள்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.15 15:55:39 +0530

Principal District Judge,
Dindigul.